1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முதலிலே இந்தத் திட்டம் ஆறு பர்த் போடவேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நான்கு பர்த் தான் போட இருக்கிறார்கள். அதனால்தான் இந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. திட்டம் முடிந்த பின்னால்தான் முழு செலவு விபரமும் தெரியும்.

Cyclone Warning Radar

* 40 Q.—Thiru R. R. MUNUSAMI:
Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that cyclone warning radar has been fixed in Madras City; and

(b) if so, that details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) சென்னையிலிருந்து 400 கிலோ மீட்டருக்குள் புயல் காற்று உருவாவதையும், அதன்போக்கினையும் கண்டறியும் திறன் வாய்ந்த, அதிக சக்தி வாய்ந்த புயல் எச்சரிக்கை ராடார் கருவி ஒன்று ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகக் கட்டிடத்தின்மேல் பொருத்தப் பட்டுள்ளது. அது தொடர்ச்சியாக இயங்க 9—1—1973 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ராடார் சாதனம், புயல் காற்றின் போக்கினை முன்னதாகவே கண்டறிவதற்காகவும், எச்சரிக்கை வழங்குவதற்காகவும் இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை வகுத்துள்ள மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதியாகும்.

Training courses for farmers

* 41 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the farmers training courses are being imparted at the District Livestock Farm at Hosur in Dharmapurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இப் பேரவையில் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? வேறு சில மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அரசாங் கத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை. இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கவேண்டுமென்ற நோக்கத்தில் தான் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியைப் பெறு பவர்கள் எல்லோரும் 5-வது வகுப்புவரையில்தான் படித்திருக் கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை அளிக்க இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister how many people have been selected so far and how many of them have been trained and whether any report has been received that the training is useful to the farmers?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே எத்தனைபேர் பயிற்சி பெற்றார்கள், அதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நல்ல பயிற்சித் திட்டத்தை ஹோசூரில் மாத்திரம் நடத்துவதன் காரணம் என்ன? தமிழக அரசு செய்திச் சுருளில் இப்படிப்பட்ட நல்ல பயிற்சித் திட்டத்தைப்பற்றிய செய்தியையே எங்களால் பார்க்க முடியவில்லை. எதை எதையோ செய்திச் சுருளில் காட்டி பணத்தை வீணாக்குவதை விட இப்படிப் பட்ட திட்டத்தைப்பற்றி மக்கள் அறியும் வகையில் செய்திச் சுருள் தயாரிக்கப்படுமா?

@ 391–395-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, செய்திச் சுருளில் பணத்தை விளக்குவது என்று சொல்வதோ அல்லது செய்திச் சுருளை விளக்குவது என்று சொல்வதோ தவறு என்று நான் கருதுகிறேன். அதற்கும் இந்த கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஹோசூரில் ஒரு கால்நடைப் பண்ணை நீண்டகாலமாகவே நடைபெற்றுவருகிற காரணத்தால், இந்தத் திட்டம் அங்கே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு ஏ. எம். இராஜா: ஹோசூரில் நடத்தப்படுகின்ற இந்தப் பயிற்சித் திட்டத்தில் பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவை பற்றிய பயிற்சிதான் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இப்போது நாம் விவசாயத்தை 'மெகனேஸ்' பண்ணுவது என்று சொல்லக் கூடிய இந்த நேரத்தில் டிராக்டர் ரிப்பேர், ஸ்பிரேயர் ரிப்பேர் போன்ற பயிற்சிகளும் கொடுக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அந்தப் பயிற்சிகள் விவசாயத் துறையில் கொடுக்கப்படுகின்றன. இது கால்நடை வளர்ப்புப் பயிற்சி. இதற்கு அந்தப் பயிற்சிகள் தேவையில்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக ஒரு கால்நடைப் பண்ணை இருந்துவருகிறது. அங்கும் இந்தப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி தேவை.

Regulated Markets in Madurantakam and Uthiramerur

*42 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up regulated markets at Madurantakam and Uthiramerur in Chingleput district; and

(*b*) if so, the details thereof?